# ஆய்வுச்சுடர்

**(பன்னாட்டு பன்முகத்தமிழ் அரையாண்டு மின்-ஆய்விதழ்)**

## அய்யநாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது, தேசியத்தர
மூன்றாம் மறுமதிப்பீட்டில் 'A' தகுதி (4க்கு 3.67 தரப் புள்ளிகள்), திறன்மிகு கல்லூரி,
புதுதில்லி இந்திய அரசு உயிரித் தொழில்நுட்பத்துறையின் நட்சத்திரத் தகுதி
மற்றும் தேசியத்தர வரிசைப் பட்டியலில் (NIRF 2018) 47ஆம் இடம் பெற்றது)

**சிவகாசி - 626124, தமிழ்நாடு, இந்தியா.**


===========================================================================


**புரவலர்**
**திரு. கி. அபிரூபன்,** M.B.A.,
தாளாளர்

**தலைவர்**
**முனைவர் செ. அசோக்,** B.Sc.,M.P.Ed.,M.Phil.,D.Y.Ed.,Ph.D.
முதல்வர்

**துணைத்தலைவர்**
**முனைவர் க. சிவனேசன்**
தமிழ்த்துறைத்தலைவர்

**பதிப்பாசிரியர்**
**முனைவர் ந. அருள்மொழி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை


===========================================================================

## சுடரின் முழக்கம்

அர்ச்சுனா ஆறு பாய்ந்தாலும் முல்லை திரிந்த பாலையாகிப் போன கந்தகமண் சிவகாசியில், உழைப்பு எந்நாளும் பாலையாகிப் போனதில்லை. பாலை நிலத்திலும் கல்வி எனும் வற்றாத நதியின் மூலம் மீண்டும் முல்லை நிலத்தை மீட்டு வருகின்றது எம் அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி! தொலைநோக்குச் சிந்தனையோடு கல்லூரியை நிறுவி எம் கல்லூரி மன்றுள் நாளும் புன்னகைப் பூக்களாய்க் காட்சி தரும் அண்ணல் திரு. ப.அய்யநாடார், அன்னை திருமதி அ.ஜானகிஅம்மாள் இருவரின் மலர்ப்பாதம் தொழுகின்றோம்.

திரு. ப.அய்யநாடார் அவர்களின் புதல்வர் பெருமக்களாய்க் கனிந்த திரு. அ.கிரகதுரை, அரிமா திரு. அ.வைரப்பிரகாசம், திரு. அ.சுபாஷ் சந்திரபோஸ் (உறுப்பினர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), திரு. அ.இராமமூர்த்தி, B.Com., (தலைவர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), ஆகியோரின் ஆளுமைத் திறத்தினை என்றென்றும் ஏற்று வணங்குகின்றோம். அண்ணல் அய்யநாடார் அவர்களின் தலைமுறை உறவுகளாய்த் தழைத்து நின்று கல்லூரியின் ஆற்றல்சால் வளர்ச்சிக்கு வித்திடும் திரு வை.அய்யன் கோடீஸ்வரன், B.Tech., (செயலர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), திரு. கி.அதிபதி, M.B.A., (உறுப்பினர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), திரு. கி.அபிரூபன், M.B.A.,(தாளாளர், அஞ்சாக் கல்லூரி ஆட்சிக்குழு), ஆகியோரின் பணிச்செம்மை போற்றுகின்றோம். நாளும் விளைக்கும் நற்செயல்களே நற்சாதனை என நல்வினை நோக்கிக் கல்லூரியை வழி நடத்தும் எம்கல்லூரி முதல்வர் முனைவர் செ.அசோக் அவர்கள் மின்-ஆய்விதழின் நல்உயர்ச்சிக்குத் தரும் உதவிக்கு நன்றி! எம் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க.சிவனேசன் அவர்கள் மின்-ஆய்விதழின் ஆக்கம் சார்ந்த பணி நகர்விற்குத் தரும் ஊக்கத்திற்கு நன்றி!

மின்-ஆய்விதழோடு கரம் கோர்த்துப் பன்னாட்டுத்தர எண் ( ISSN NO. ) பெற உதவிய ஆய்வுநெறிக்குழு உறுப்பினர்களுக்கு அன்பு தோய்ந்த நன்றி!. ஆய்வுக்கட்டுரைகளுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த முனைவர் நா. சுலோசனா (உதவிப்பேராசிரியர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) அவர்களுக்குப் புன்னகை நிறை நன்றி!

ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த எம்கல்லூரி ஆங்கில இளநிலைத் துறைத்தலைவர் முனைவர் மு.மூவேந்தன், உதவிப்பேராசிரியர் திருமதி. மோ.அகிலா, ஆகியோரின் அறிவார்ந்த உதவிக்கு நன்றி!. காட்சி மொழியால் அட்டைப்படத்தை வடிவமைத்துக் கொடுத்த காட்சித்தொடர்பியல்துறை உதவிப்பேராசிரியர் பா.வெங்கடேஷ் அவர்களுக்கு நன்றி! வெளித்தெரியாது இவ் இதழ் பணிக்கு பல்லாற்றானும் உழைத்திட்ட நல்உள்ளம் நிறைந்த வேர்களுக்கு என்றென்றும் நன்றி!

பன்னாட்டுத் தர எண் ( ISSN NO. ) பெற்றுப் புதுப்பொலிவோடு பூத்து நிற்கின்றது இம்மின்-ஆய்விதழ்! நன்னிலத்தில் நல்விதை இட்டால் வித்து விளைந்து வளம் பெருக்குவது திண்ணம். தமிழ் எனும் நன்னிலத்தில் அறிவார்ந்த கருத்து எனும் வித்தை விதைத்து ஆய்வுச் சிந்தனை எனும் வளம் பெருக்கியுள்ளார்கள் கட்டுரையாளர்கள்!

நிலவை நோக்கிப் பயணம் செய்யத் தூண்டி ஆங்கே வாழ்வதற்கான சாத்தியக்கூறுகளைப் பதிவு செய்துள்ள திறம் - இத்தாலி மண்ணில் மலர்ந்த "சானட்" எனும் இலக்கியப் படைப்பை அறிந்தும் உவந்தும் "சந்தமெட்டாறு" எனத் தமிழ் இலக்கிய மண்ணில் பதியன் இட்டுள்ள திறம் - தொன்மைத்தமிழ்ச் சமூகத்தை மீட்டெடுக்க வழிகோலும் கல்வெட்டுக் கண்டுபிடிப்புகள் கூறும் நம் முன்னோரின் நீர் மேலாண்மைத் திறம் - நொடிதோறும் நொடிதோறும் ஆயிரம் நோய் தீர்க்கும் மருந்துகள் தோன்றினும் உடலைக்கூறு போடாது இயற்கையோடு இணைந்து நோய் தீர்க்க அறிவுறுத்தி கி.ரா. வின் கதைகளுள் வாழும் தமிழ் மருத்துவத்திறம் - வாழும் மண்ணையும் இயற்கையையும் மீட்டெடுக்கப் படைப்புகள் வழி

ஓங்கிக் குரலெழுப்பும் சூழல் பெண்ணியக் குரலின் திறம் - புலம் பெயர்ந்து ஆண்ட மராட்டிய மன்னர்களின் மோடி மொழி ஆவணம் குறிப்பிடும் வழக்குச் சொற்களின் திறம் - சங்கத்தமிழரின் அணிகலன் பயன்பாட்டுள் மறைந்து வாழும் உடலநல அறிவியல் திறம் - அறிவியல் உண்மைகளோடு ஆய்ந்துள்ள வாய்பேசாத அஃறிணைகளுக்கான தொடர்பு மொழித்திறம் - டேனியல் கோல்மெனின் கோட்பாட்டுச் சிந்தனை உலகப்பொதுமறையாம் திருக்குறளுள் ஆழ்ந்து கிடக்கும் சிந்தனைத் திறம் - தமிழர் தம் இனக்குழுச் சமூகத்தாராம் ஏற்காடு மலையாளிகளின் பண்பாட்டு வாழ்வியலை கட்டுக்குள் நகர்த்தும் கணியான்களின் நெறித்திறம் - தொழில் சார்ந்து உலகப் புகழ்பெற்ற சிவகாசி மண் உருவாக்கி ஈந்தளித்துள்ள டுவிட்டு கவிகளின் திறம் - கலை வடிவங்களுள் ஒன்றான “சிக்காட்டம்“ குறித்த கலைப் பதிவையும் கலைஞர்களின் வாழ்வியல் பதிவையும் குறித்திடும் திறம் - சிலப்பதிகாரக் கதைப் புனைவில் கதை மாந்தர்களின் உயிரிழப்பை இதயநோயோடு பொருத்தி ஆய்ந்திடும் மருத்துவ அறிவியல் திறம் எனப் பல்வகையான ஆய்வுச் சிந்தனையோடு மணம் பரப்பி நிற்கின்றது மின்-ஆய்விதழ் ஆய்வுச்சுடர்!

சுடரின் அறிவு முழக்கம் மழையின் முழக்கம் போல் முழங்கிப் பொழிந்து ஆய்வு வளம் சேர்க்கட்டும்.........

**ந. அருள்மொழி**
பதிப்பாசிரியர்